Q21. ரவுலிங்கின் கனவு உலகத்தைக் கண்டு அனைத்துச் சிறுவர்களும் ஏன் ஏங்குவர்?(4)

Q22. "அந்த வெற்றி தந்த அதிர்ச்சியில் நான் எறந்து விடுவேனோ, என்று நினைத்தேன்" என்று ஏன் ரவுலிங் குறிப்பிட்டார்? (4)

Q23. ரவுலிங் "இறவாப் புகழ்" பெற்றவர் என்று கருதப்படுவதற்குக் காரணம் என்ன? (4)

Q24. பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. புலமை - ______________________ (2)

ஆ. கணமே - ______________________ (2)



181

Prelims

P6 HMT தாள் - 6

ஓர் ஊரில் அரசன் ஒருவன்........

1. தனக்கு 2. அதனால் 3. வந்தார் 4. புன்னகை 5. தெளிந்தது

6. வழக்கறிஞரின் வாதத் திறமையே காரணமாகும்.

7. ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தது/மூழ்கடித்தது.

8. அரசாங்கத்தால் கையாளப்படுகின்றன.

9. பேரானந்தத்தை அளித்தது.

10. அடியில் 11. கத்தியதை 12. பருந்தின் 13. காயத்திலிருந்து

14. 4 15. 1 16. 7 17. 6

18. ரவுலிங்கின் மொழிப்புலமை அவருக்கு ஆய்வறிக்கைகளை மொழிப்பெயர்ப்புச் செய்யும் தொழிலைப் புரிய உதவியது.

19. தினமும் ரயில் பயணத்தின்போது அவர் படித்த எளிய கதைப் புத்தகங்கள், விறுவிறுப்பு நாவல்கள், துப்பறியும் கதைகள், திகிலூட்டும் சம்பவங்கள், நிறைய கதை நூல்கள் போன்றவை அவரது சிந்தனையைக் கவர்ந்ததால் தானும் ஒரு சிறந்த எழுத்தாளராக வரவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

20. சன்னல் வழியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது சட்டென ஒரு குட்டிப் பையன் அவர் கற்பனியில் தோன்றியபோது அவனுக்கு "ஹாரி" என்று தன்னையறியாமலேயே அவனுக்கு அப்போதே ஒரு பெயரை அளித்ததோடு ஒரு கற்பனை உலகத்தை உருவாக்கியதும் பயணத்தின் போது ரவுலிங்கின் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைத்த சம்பவம் ஆகும்.

21. மாயாஜால உலகத்தில் மாய மந்திர வித்தைகளை கற்பிக்கும் ஒரு அதிசய பள்ளி இருப்பதாலும், மந்திரவாதி ஆசான்கள் இருப்பதாலும் ரவுலிங்கின் கனவு உலகத்தைக் கண்டு அனைத்துச் சிறுவர்களும் ஏங்குவர்.

22. அவரின் கதை மிகவும் பிரபலமாகி, அது அவருக்குப் பல லட்சங்களைப் பெற்றுத் தந்ததால் ரவுலிங் "அந்த வெற்றி தந்த அதிர்ச்சியில் நான் இறந்து விடுவேனோ என்று நினைத்தேன்" என்று குறிப்பிட்டார்..

23. உலகம் எப்பொழுதும் ரவுலிங்கையும் அவரது கற்பனைக் கதாப்பாத்திரமான ஹாரியையும் திண்மையாக மறக்காது என்பதால் அவர் இறாவாப் புகழ்ப் பெற்றவர் என்று கருதப்படுகிறது..

<u>Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)</u>

அ. திறமை
ஆ. நொடியே

Index No. [ | | | | | ] – [ ]

PRIMARY SCHOOL
PRELIMINARY EXAMINATION
PRIMARY 6

தாள் -7

HIGHER TAMIL

PAPER 2

NAME : ______________________________( )   DATE : ____________

CLASS : PRIMARY 6 _______   PARENT'S SIGNATURE: ______________

**60 marks**

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Write your Index No. in the boxes at the top right hand corner.
2. Do not turn over this page until you are told to do so.
3. Follow all instructions carefully.
4. Answer all questions.

181

P6 HMT

Prelims தாள் - 7

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**நான் வயிறு குலுங்கச் சிரித்த ஒரு நாள்**

நீ உன் வாழ்க்கையில் செய்த ஒரு சம்பவம் உன்னை மட்டுமல்லாமல் உன்னைச் சுற்றியிருந்த அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது. அந்தச் சம்பவத்தை விவரித்து எழுது.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

இன்னும் சற்று நேரத்தில் தொலைக்காட்சியில் எனக்குப் பிடித்த கேலிச்சித்திர நிகழ்ச்சி தொடங்கி விடும். நான் என் அம்மாவை அவசரப்படுத்திச் சூடான சோற்றையும் குழம்பையும் தட்டில் போட்டுக் கொண்டு வேகமாக வரவேற்பு அறையை நோக்கி விரைந்தேன். மறுகணம் நான் தரையில்.........................

நாள்-7

Name : ____________________

'அ' பிரிவு

<u>பிழை திருத்தம்</u> ( 10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.

முற்காலத்தில் செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு உறவினர்கள் பலர் இருந்தனர். அனைவருக்கும் அடிக்கடி விருந்து கொடுத்து உபசரிப்பது அவரது (Q1)<u>வழக்கமான</u> இருந்தது. அவர்களுக்குப் பண உதவியும் அவர் அளித்து வந்தார். அதனால் அவர்கள் எப்பொழுதும் அவரைப் (Q2)<u>புகல்ந்தவாறே</u> இருந்தனர். செல்வந்தர் ஒரு நாள் அவர்களுக்கு ஒரு சிறிய சோதனை கொடுத்துப் பார்க்க என்ணினார்.

வழக்கம் போல் செல்வந்தர் உறவினர்களை வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தார். விருந்துக்கு வந்தவர்களுக்கு ஓர் அதிர்ச்சி காத்து (Q3)<u>இருந்தார்கள்</u>. செல்வந்தர் மிகவும் சோகமாய் காணப்பட்டதே அதற்கு காரணம். தன் செல்வம் எல்லாம் அழிந்துவிட்டது என்றும் அதுவே அவர் அளிக்கும் கடைசி விருந்து என்றும் செல்வந்தர் கூறினார். இதைக் கேட்டு அவரது உறவினர்கள் பலர் அவ்விடத்தை விட்டு (Q4)<u>விலகித்</u> தொடங்கினர். ஒரு சிலரே அவர் பக்கத்தில் இருந்து ஆறுதல் கூறினர். மீண்டும் செல்வத்தைப் பெறும் வழிகள் பற்றியும் அவருக்கு தங்களால் இயன்ற உதவியை எப்படி செய்வது என்பதைப் பற்றியம் பேசினர். அவர்களது அன்பை எண்ணிய செல்வந்தர் மனம் (Q5)<u>நெகிழ்கிறார்</u>. உண்மையானவர்கள் யார் என்பதை அந்தச் சோதனையிலிருந்து செல்வந்தர் தெரிந்துகொண்டார்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |



186
P6|Prelims|HMT|7

வாக்கியங்களை முடித்து எழுதுதல் ( 8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. மதம் கொண்ட யானை புலியைத் தூக்கி எறிந்தது.

மதம் கொண்ட யானையால் புலி ____________________

Q7. மாணவர்களின் தேர்வு முடிவுகளைப் பார்த்து ஆசிரியர் மகிழ்ந்தார்.

மாணவர்களின் தேர்வு முடிவுகள் ஆசிரியரை ____________________

Q8. போதுமான ஆதாரங்கள் இல்லாததால் கைது செய்யப்பட்டவன் விடுவிக்கப்பட்டான்.

கைது செய்யப்பட்டவன் விடுவிக்கப்பட்டதற்கு காரணம் ____________________

____________________

Q9. தங்கள் அடுக்குமாடி கட்டடத்தில் நடந்த கொலை பற்றிய செய்தி குடியிருப்பாளர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது.

தங்கள் அடுக்குமாடி கட்டடத்தில் நடந்த கொலை பற்றிய செய்தியை அறிந்த குடியிருப்பாளர்கள் ____________________



187/

வேற்றுமை ( 8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

சில ஆண்டுகளுக்கு முன் இத்தாலி நாட்டின் ஒரு பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டது. நில நடுக்கம் வருவதற்குமுன் அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்த சில வீட்டுப் பிராணிகள் வேறொரு (Q10)__________________ (பகுதி) சென்றுவிட்டன. ஆனால் விசுவாசமுள்ள ஒரு நாய் மட்டும் தன் (Q11)__________________ (எஜமான்) அங்கேயே இருந்தது. அது மற்ற பிராணிகளைப் பின்தொடராமல் தன் எஜமான் படுத்திருந்த கட்டிலின் அருகிலேயே நின்றவாறு ஓயாது குரைத்தது. அதைக் கேட்ட எஜமான் கண்விழித்தார். அவர் நாய் குரைத்ததற்குக் காரணம் தெரியாமல் சற்று நேரம் குழம்பினார். அவ்வேளையில் அவர் நின்ற இடம் சிறிது ஆட்டம் காணத் தொடங்கியது. (Q12)__________________ (மேசை ) சில பொருள்கள் கீழே விழுந்து உடைந்தன. அவரால் தன் கண்களை நம்ப முடியவில்லை. அப்போது தான் தன் நாய் குரைத்ததற்கான (Q13)__________________ (காரணம்) அவர் புரிந்து கொண்டார். அவர் தன் உயிரைக் காத்த நாயுடன் வீட்டை விட்டு விரைவாக வெளியேறினார்.



188

## 'ஆ' பிரிவு

<u>கருத்தறிதல்</u> ( 8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

ஒரு நாள் அக்பருக்கும் அவர் மனைவிக்கும் தகராறு ஏற்பட்டது. அக்பர் தன் மனைவியிடம், "இங்கிருந்து போகும் போது உனக்குப் பிடித்த பொருளை எடுத்துக்கொண்டு போ," என்று கூறினார். அக்பரின் மனைவி, "உங்களை விட்டுப் பிரிந்து போவதற்கு முன் நான் உங்களுக்கு என் கையால் ஒரு கோப்பை பானம் கொடுக்க அனுமதி வேண்டுகிறேன்" என்றார். (Q14)____________________. ஒரு சில நிமிடங்களிலேயே அக்பர் கொட்டாவி விட்டுக்கொண்டு மயங்கித் தூங்கி விட்டார். (Q15)____________________. அவரது மனைவி தனக்குப் பிடித்த பொருளுடன் தன் தாய் வீட்டுக்குச் சென்றார்.

சில மணி நேரத்திற்குப் பிறகு மயக்கம் தெளிந்து கண் விழித்தார் அக்பர். (Q16)____________________. ஆத்திரமடைந்த அக்பர் தன் மனைவியை அழைத்து, "நான் எப்படி இங்கு வந்தேன்?" என்றார். "என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? (Q17)____________________. உங்களைவிட அந்த அரண்மனையில் எனக்குப் பிடித்தது வேறு எதுவும் இல்லை. அதனால்தான் நான் உங்களை இங்கு அழைத்து வந்தேன்," என்றார் அக்பரின் மனைவி. அதைக் கேட்ட அக்பர் தன் கோபத்தை மறந்து மனைவியின் சாமர்த்தியத்தைப் பாராட்டினார்.

(1) காவலாளிகள் அக்பரை ஒரு பல்லக்கில் கிடத்தினார்கள்.

(2) நான் எதையும் செய்யலாம் என்று சுதந்திரம் கொடுத்தீர்கள்.

(3) அக்பர் தன் அரண்மனையில் இருப்பதை உணர்ந்து கொண்டார்.

(4) எனக்குப் பிடித்தமானதை எடுத்துவரலாம் என அனுமதித்தீர்கள்.

(5) இராணி கொடுத்த பானத்தை அக்பர் குடித்தார்.

(6) அக்பரை அவரது படுக்கையில் படுக்க வைத்தனர்.

(7) அப்போது அக்பர் அவரது மாமனார் இல்லத்தில் இருப்பதை உணர்ந்தார்.

(8) அதற்கு இணங்காத அக்பர் ஆத்திரத்துடன் தன் வேலைகளில் மூழ்கினார்.

| விடை எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |



190

## 'இ' பிரிவு

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (26 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.

இந்தியாவின் விடுதலைக்காக அஞ்சா நெஞ்சம் கொண்டு போராடிய தலைவர்களுள் ஒருவர் சிதம்பரம் பிள்ளை ஆவார். அவர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் 1872-ஆம் ஆண்டு பிறந்தார். அவர் தம் தந்தை உலகநாத பிள்ளையைப் போல வழக்கறிஞர் தொழில் செய்து புகழ்ப் பெற்று விளங்கினார்.

சிதம்பரனார் தமிழ் நாடெங்கும் சென்று மக்களிடம் விடுதலை உணர்வைத் தூண்டினார். இவருக்குத் துணையாக மகாகவி பாரதியாரும், சுப்பிரமணிய சிவாவும் சென்றனர். அச்சமயத்தில் தூத்துக்குடியில் நடைபெற்ற கடல் வாணிகத்தில் ஆங்கிலேயர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அவர்கள் இந்திய வணிகர்களை <u>இழிவாக</u> நடத்தினர். அதைக் கண்டு மனம் வருந்திய சிதம்பரனார் இந்திய வணிகர்களின் நிலையை மேம்படுத்த முற்பட்டார். அதற்காக அவரே ஒரு கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். விரைவில் இந்திய வணிகர்கள் அவரது நிறுவனத்தின் மூலம் தங்களது பண்டங்களை வெளியூருக்கு அனுப்பத் தொடங்கினர். அவர்கள் சிதம்பரனாரை 'கப்பலோட்டிய தமிழன்' எனப் புகழ்ந்து போற்றினர்.

ஆனால் சிதம்பரனாரின் செயலால் வியாபாரத்தில் நட்டத்தை எதிர்நோக்கிய ஆங்கிலேயர்கள் அவர் மேல் கடுங்கோபம் கொண்டனர். அவர்கள் சிதம்பரனாரின் கப்பல் நிறுவனத்திற்கு பல <u>இடையூறுகள்</u> விளைவித்தனர் அதனால் சிதம்பரனார் தம் கப்பல் நிறுவனத்தை மூட வேண்டியதாயிற்று.

1908 - ஆம் ஆண்டு சிதம்பரனார் ஒரு பொதுக்கூட்டத்தில் ஆங்கிலேய அரசாங்கத்தை அவமதித்துப் பேசியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அவர் பல இன்னல்களைச் சந்தித்த போதும் அவரது விடுதலை வேட்கை அடங்கவில்லை. 1911-ஆம் ஆண்டு சிதம்பரனார் தண்டனை காலம் குறைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அரசாங்கம் அவரது வழக்கறிஞர் தொழில் நடத்தும் உரிமத்தை பறித்துக்கொண்டது. அவர் வறுமையில் வாடினார். பின் உயர்நீதிமன்ற நீதிபதி வாலஸ் என்பவரால் சிதம்பரனார் தம் வழக்கறிஞர் உரிமத்தை மீண்டும் பெற்றார்.



141

சிதம்பரனார் ஒரு சிறந்த வழக்கறிஞராகவும் வைராக்கியமிக்க விடுதலைப் போராட்ட வீரராகவும் மட்டுமின்றி சிறந்த தமிழ்ப் புலவராகவும் விளங்கினார். அவர் தம் சுயசரிதையைக் கவிதையாக எழுதியதோடு திருக்குறளின் சில அதிகாரங்களுக்கு விஅளக்கமும் எழுதியுள்ளார். இவ்வாறு சிதம்பரனார் பிள்ளை தம் வாழ்நாளின் பெரும் பகுதியைத் தன் தாய்நாட்டிற்கும் தாய்மொழிக்கும் அர்ப்பணித்து அழியாப் புகழோடு திகழ்கிறார்.

<u>வினாக்கள்</u>

Q18. சிதம்பரனார் பிள்ளை என்ன தொழில் செய்து வந்தார்? (2)

________________________________________

________________________________________

________________________________________

Q19. மகாகவி பாரதியாரும் சுப்பிரமணிய சிவாவும் சிதம்பரனாருக்கு எதில்? துணையாக இருந்தனர்?(4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q20. சிதம்பரனார் இந்திய வணிகர்களின் நிலையை எவ்வாறு மேம்படுத்தினார்? (4)

________________________________________

________________________________________

________________________________________



192

Q21. சிதம்பரனார் கப்பல் நிறுவனம் மூடப்படக் காரணம் என்ன?(4)

Q22. சிதம்பரனார் ஏன் சிறையில் அடைக்கப்பட்டார்? (4)

Q23. சிதம்பரனார் அழியாப் புகழ் பெறக் காரணம் என்ன? (4)

Q24. பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. இழிவாக - ______________ (2)

ஆ. இடையூறுகள் - ______________ (2)



193

Prelims

P6 HMT தேர்வுத்தாள் - 7

<u>முற்காலத்தில் செல்வந்தர்.........</u>

1. வழக்கமாக 2. புகழ்ந்தவாறே 3. இருந்தது 4. விலகத்
5. நெகிழ்ந்தார்

6. தூக்கி எறியப்பட்டது.

7. மகிழ்வித்தது.

8. போதுமான ஆதாரங்கள் இல்லாததே ஆகும்..

9. அச்சம் அடைந்தார்கள்.

10. பகுதிக்கு 11. எஜமானுடன் 12. மேசையிலிருந்து 13. காரணத்தை

14. 5 15. 1 16. 7 17. 4

18. சிதம்பரனார் பிள்ளை வழக்கறிஞர் தொழில் செய்து வந்தார்.

19. தமிழ் நாடெங்கும் சென்று மக்களிடம் விடுதலை உனர்வைத் தூண்ட மகாகவி பாரதியாரும் சுப்பிரமணிய சிவாவும் சிதம்பரனாருக்குத் துணையாக இருந்தனர்.

20. சிதம்பரனார் ஒரு கப்பல் நிறுவனத்தை தொடங்கி அதன் மூலம் இந்திய வணிகர்கள் தங்களது பண்டங்களை வெளியூருக்கு அனுப்ப ஏற்பாடு செய்ததன் வழி இந்திய வணிகர்களின் நிலையை மேம்படுத்தினார்.

21. சிதம்பரனாரின் செயல் ஆங்கிலேயர்களின் வியாபாரத்தில் நட்டத்தை ஏற்படுத்தி அவர்களைக் கடுங்கோபத்திற்கு உள்ளக்கியது. அதனால் ஆங்கிலேயர்கள் அவருடைய கப்பல் நிறுவனத்திற்கு பல இடையூறுகள் விளைவித்ததே சிதம்பரனாரின் கப்பல் நிறுவனம் மூடப்படக் காரணம் .

22. 1908ஆம் ஆண்டு சிதம்பரனார் ஒரு பொதுக்கூட்டத்தில் ஆங்கிலேய அரசாங்கத்தை அவமதித்துப் பேசியதாகக் குற்றம் சுமத்தப்பட்டதால் சிறையில் அடைக்கப்பட்டார்.

23. ஒரு சிறந்த வழக்கறிஞராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும், சிறந்த புலராகவும், தம் சுயசரிதத்தைக் கவிதையாக எழுதி திருக்குறளின் சில அதிகாரங்களுக்கு விளக்கமும் எழுதியதாலும் சிதம்பரனார் அழியாப் புகழ்ப்பெற்றார்.

24. அ. தாழ்வாக ஆ. சிக்கல்கள்.

தாள் - 8

PRIMARY SCHOOL
PRELIMINARY EXAMINATION
PRIMARY 6

NAME : ____________________ (   )

CLASS : P 6 (   )

DATE :

# HIGHER TAMIL

## PART 2

| MARKS SCORED | |
|---|---|
| TOTAL | / 60 |

Parent's Signature / Date

**INSTRUCTIONS TO CANDIDATES**

Do not open this booklet until you are told to do so.
Follow all instructions carefully.
Answer all questions.

WRITE ALL YOUR ANSWERS IN THIS BOOKLET.

(Ab

P6 HMT

Prelims தாள் - 8

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**"அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம் '**

உன் நண்பனின் உண்மையான நட்பை உணர்த்திய ஒரு சம்பவத்தைப் பற்றி எழுது.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

விடுமுறையைக் கழிப்பதற்காக என் அத்தையின் குடும்பம் சிங்கப்பூருக்கு என் வீட்டிற்கு வந்திருந்தனர். என் அத்தையின் பிள்ளைகளுடன் நான் அறிவியல் நிலையத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு காண்பிக்கப்பட்ட திரைப்படத்தை நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம். என் அத்தையின் ஏழு வயது மகள் நாற்காலியில்.................

'அ' பிரிவு

தாள் - 8

## A1 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்டச் சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்காணும் கட்டத்தில் எழுது.

வாழ்க்கை பல பருவங்களைக் கொண்டது. அப்பருவங்களில் மாணவப்பருவம் குறிப்பிடத்தக்கப் பருவமாகும். இளமைத் துடிப்பு மிக்க (Q1)<u>இப்பருவத்தை</u> பல்வேறு கற்பனைகள் தோன்றும். துணிச்சல் மிக்க சாதனைகள் செய்ய மனம் துடிக்கும். இருப்பினும் எல்லா மாணவர்களும் வாழ்க்கையில் பெரிய வெற்றிகளைப் பெறுவதில்லை. பொதுவாக மாணவர்கள் தங்களிடமுள்ள ஆற்றல்கள் (Q2)<u>அனைத்தையும்</u> முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. சிலர் தங்கள் ஆற்றல் என்ன என்பதைச் சிறிதும் உணராதவர்களாக இருப்பார்கள். வேறு சிலரோ தங்கள் ஆற்றலை உணர்ந்தும் அதைத் தவறான வழிகளில் பயன்படுத்திக் கொண்டு (Q3)<u>இருந்தார்கள்.</u>

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்வழிகாட்டியாக இருந்து அவர்களுடைய ஆற்றலையும் திறமையினையும் நல்ல திசையில் திருப்பிவிட (Q4)<u>முயற்சிக்கிறார்.</u> இருந்தாலும் மாணவர்கள் ஆசிரியர்களின் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடக்க முயற்சிக்காவிட்டால், ஆசிரியர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிடும். பள்ளிகள் மாணவர்களின் திறமைகளை (Q5)<u>வளர்த்து</u> வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுக்கின்றன. ஆசிரியர்கள் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளை மாணவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். ஆனால் செயல்பட வேண்டியது மாணவர்கள்தானே!

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

(அடுத்த பக்கம் பார்க்க)

A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. கற்றவர்கள் உலகில் அமைதி நிலவ வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

உலகில் அமைதி நிலவ வேண்டும் என்பதே ______________________________

______________________________________________________________.

Q7. தென் இந்தியாவில் திடீரென்று ஏற்பட்ட வெள்ளத்தால் பல இடங்களில் வாழை மரங்கள் அழிந்தன.

தென் இந்தியாவில் பல இடங்களில் வாழை மரங்கள் அழிய காரணம் ____________.

______________________________________________________________.

Q8. மன்னனுக்கு ஔவையாரால் மிகச் சிறந்த அறிவுரை வழங்கப்பட்டது.

ஔவையார் மன்னனுக்கு ______________________________________

______________________________________________________________.

Q9. விமலா புதிர்ப் போட்டியில் சரியான விடைகளைக் கூறியதால் முதல் பரிசு பெற்றாள்.

விமலா புதிர்ப்போட்டியில் சரியான விடைகளைக் கூறாமல் இருந்திருந்தால் ________

______________________________________________________________.

(அடுத்த பக்கம் பார்க்க)

199

A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

அமெரிக்காவில் உணவு விடுதி ஒன்றில் கட்டடக்கலைச் சிற்பிகளும் பொறியியலாளர்களும் மின்தூக்கியின் இருப்பிடத்தை அளந்து ஆராய்ந்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த வாயிற்காவலர் அவர்களைப் பார்த்து, 'என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று வினவினார். பழைய மின்தூக்கி, விடுதியில் தங்கும் (Q10)________________ விருந்தினர்கள்) போதுமானதாக இல்லை. ஆகவே, சில மாற்றங்களைச் செய்து புதிய மின்தூக்கியைப் பொருத்த அவர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். இதை அவர்கள் (Q11)________________ (அவ்வாயிற்காவலர்) தெரிவித்தனர். வாயிற்காவலருக்கு மிகவும் கவலையாகிவிட்டது. இந்தப் பணியினால் விருந்தினர்களுக்கு இடர்ப்பாடு வரும் என்று அவர் கருதினார். அதேபோல், 'மின்தூக்கிப் பொருத்தும் பணி முடிய இரண்டு அல்லது மூன்று மாதங்களாகும். அதுவரை விடுதியை மூட வேண்டியிருக்கும்' என்று ஆராய்ச்சிக்குழு கூறியது. இதைக்கேட்ட வாயிற்காவலர், 'அவ்வாறு மூடிவிட்டால் விடுதிக்குப் பெரும் நஷ்டம் ஏற்படுமே' என்று (Q12)________________ (வருத்தம்) கூறினார்.

'ஆமாம். அதுவரை விடுதியில் வேலை செய்யும் ஊழியர்களை வேலையிலிருந்து நிறுத்த வேண்டியிருக்கும். வேறு வழியில்லை. உனக்குத் தெரிந்தால் ஏதாவது ஒரு வழி சொல் பார்க்கலாம்' என்று அவர்கள் ஏளனமாகக் கூறினார்கள். மின்தூக்கியை கட்டடத்திற்கு வெளியே அமைத்தால் இந்தச் சிக்கல்கள் தீர வழி உண்டு என்று யோசனை தந்தார் வாயிற்காவலர். இந்தச் சிறந்த (Q12)________________ (யோசனை) சாதாரண ஊழியரான வாயிற்காவலர் கூறினார். அதைக் கேட்டதும் கட்டடக்கலைச் சிற்பி மிகுந்த வியப்புக்கு உள்ளானார். பிறகு, அந்த யோசனையின்படியே மின்தூக்கி கட்டடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டது. கட்டடத்திற்கு வெளியே பொருத்தப்பட்ட முதல் மின்தூக்கியாக அது அமைந்தது.

(அடுத்த பக்கம் பார்க்க)

200

ஆ' பிரிவு

**B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

பேரறிஞர் டயோஜெனிஸ் என்பவர் மாவீரன் அலெக்சாண்டரின் ஆசிரியராக இருந்தார். செல்லுமிடம் எல்லாம் வெற்றி மேல் வெற்றி பெறும் ஆணவத்தால் உலகிலேயே தான் உயர்ந்தவன் என்றும் தனக்குச் சமமான பெருமை பெற்றவர் யாருமே இல்லை என்றும் அலெக்சாண்டர் இறுமாப்புக் கொண்டிருந்தான். (Q14) ____________________. அப்போது டயோஜெனிஸ் பல மண்டை ஓடுகளை வைத்து ஒவ்வொன்றையும் மிக உன்னிப்பாக உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார். (Q15) ____________________. முழுக் கவனத்துடன் தன் செயலிலேயே மனதைச் செலுத்திக்கொண்டிருந்தார். பொறுமை இழந்த அலெக்சாண்டர் மெல்ல ஒரு கனைப்பு கனைத்தான். (Q16) ____________________.

"ஐயா, இந்த மண்டை ஓடுகளை வைத்து என்ன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறீர்கள்?" என்று பணிவுடன் அலெக்சாண்டர் கேட்டான். "வேறொன்றுமில்லை. இதில் ஒன்று உன் தந்தையின் மண்டை ஓடு மற்றவை அடிமைகளின் மண்டை ஓடுகள். இவற்றில் எது உன் தந்தையின் மண்டை ஓடு என்று கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டேன். ஆனால், இந்த மண்டை ஓடுகளிடையே என்னால் எந்த வேற்றுமையையும் காண முடியவில்லை. (Q17) ____________________. உன்னால் கண்டுபிடிக்க முடிகிறதா பார்," என்று சொன்னார் டயோஜெனிஸ். இதைக் கேட்ட அலெக்சாண்டரின் ஆணவம் அழிந்தது அவன் தலைகுனிந்து நின்றான்.

(அடுத்த பக்கம் பார்க்க)

201

(1) மண்டை ஓடுகள் வெவ்வேறு வடிவத்தில் உள்ளன.

(2 பேரறிஞர் டயோஜெனிஸ் தன்னைவிட அறிவிலும் வீரத்திலும் சிறந்தவராக இரக்க முடியாது என்று அலெக்சாண்டர் எண்ணியிருந்தான்.

(3) நீண்ட நேரமாகியும் அலெக்சாண்டர் வந்ததை அவர் கவனிக்கவில்லை..

(4 எல்லாம் ஒன்று போலவே இருக்கின்றன.

(5) ஆசிரியர் திரும்பிப் பார்த்தார்.

(6) ஒருநாள் பேரறிஞர் டயோஜெனிஸ் அலெக்சாண்டரைக் காண அவன் இல்லத்திற்குச் சென்றார்.

. (7) அலெக்சாண்டர் டயோஜெனிஸின் செயலைக் கண்டு சினங்கொண்டான்

(8) ஒருநாள் அலெக்சாண்டர் தனது ஆசிரியரைச் சந்திப்பதற்காக அவர் இல்லத்திற்குச் சென்றான்..

| வினா எண் | விடை |
|---|---|
| **Q14** | |
| **Q15** | |
| **Q16** | |
| **Q17** | |

(அடுத்த பக்கம் பார்க்க)

## 'இ' பிரிவு

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)**

**பின்வரும் செய்தியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.**

கடல் உணவை விரும்பி உண்பவர்கள் நம்மில் குறைவு எனலாம். இவ்வுணவுப் பொருட்களின் மீது நமக்குள்ள தேவையற்ற அச்சம் காரணமாகவும், இவை பற்றி சரியான தகவல் நமக்குத் தெரியாததாலும், உண்ணாத ஒரு சிலரால் பரப்பி விடப்படும் புரளிகள் காரணமாகவும் இவற்றை நாம் வெறுக்கிறோம். ஆனால் இவற்றின் மகத்துவம் அளவிடற்கரியது. பொதுவாகக் கடல் உணவு என்று கூறும்போது அதில் பல்வேறு வகைப்பட்ட மீன்கள், இறால்கள், நண்டுகள், போன்ற உயிரினங்களும் கடல் பாசி போன்ற தாவர இனங்களும் அடங்கும்.

உடலுக்குத் தேவையான வைட்டமின்களோடு மிகுந்த சக்தியை வழங்கும் இவ்வுணவுப் பொருட்கள் அரிய மருந்துப் பொருட்களாகவும் பயன்படுகின்றன என்பது பெரிய வியப்பை ஏற்படுத்தலாம். இன்றைய மருத்துவ உலகில் தயாரிக்கப்படும் 50 விழுக்காட்டிற்கு மேலான அரிய மருந்துப் பொருட்களுக்கான மூலம் கடல் உயிரினங்கள்தான் என்பது வியப்புக்குரிய உண்மை. உணவுப்பொருட்கள் அல்லாத வேறு பல கடல் உயிர்ப்பொருட்களும் உயிர் காக்கும் மருந்துப் பொருட்களாகப் பயன்பட்டு வருகின்றன.

மருந்துக் கடைகளில் தற்போது விற்பனையில் இருந்துவரும் மீன் எண்ணெய் மாத்திரைகளைப் பற்றி நன்கு அறிவோம். வைட்டமின் 'ஏ' மற்றும் 'டி' குறைபாடுகளினால் ஏற்படும் நோய்களான ரிக்கட்ஸ், மாலைக்கண் நோய், கண்ணில் ஏற்படும் குறைபாடுகள், தோல் நோய்கள் போன்றவற்றிற்கு மீன் எண்ணெய் உட்கொள்ளுமாறு மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். இந்த எண்ணெய் மீன்களின் உடலில் குறிப்பாகக் கல்லீரலிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்றது. மீன் எண்ணெயைத் தினமும் உட்கொள்வதன் மூலம் கண்பார்வை பளிச்சிடுகிறது; எலும்பு மற்றும் பற்கள் வலுப்பெறுகின்றன; தோல் மெருகூட்டப்படுகிறது. மீன் எண்ணெய்க்கு இரத்தத்திலுள்ள கொழுப்புச் சத்தின் அளவைக் கட்டுப்படுத்தும் திறன் உண்டு. இரத்தத்தில் கொழுப்புச் சத்தின் அளவு குறைவதால், இதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் பாதை சீர்டைகிறது. இதனால் இதயத்தின் செயல் தங்குதடையின்றிச்

(அடுத்த பக்கம் பார்க்க)

சீர்படுத்தப்படுகிறது. ஆகவே மீனை உணவாக உட்கொள்ளும் எவருக்கும் மாரடைப்பு வருவதற்கான <u>வாய்ப்பு</u>க் குறைவு எனக் கூறலாம்.

இதய நோய்களுக்கு மட்டுமல்லாமல் மீன் உணவானது பல்வேறு உடல் நோய்களையும் குணப்படுத்தும் வல்லமை பெற்றது. புற்றுநோய், ஆஸ்துமா போன்றவை மீனை உணவாக உண்பதன் மூலம் குணமாகின்றன. இங்கிலாந்து மருத்துவமனை ஒன்றில் செய்த ஆராய்ச்சியில், 'சால்மன்' எனப்படும் மீன் மனிதனுக்கு ஏற்படும் கொடிய சிறுநீரக நோய்களைத் <u>தீர்க்கும்</u> வல்லமை பெற்றது எனத் தெரிய வந்தது.

கடற்கரைகளில் ஓடி விளையாடும் நண்டு வகைகளை நாம் பார்த்திருக்கிறோம். அவற்றில் சிலவற்றை நாம் உணவாகவும் பயன்படுத்துகிறோம். ஆனால் அவற்றில் உள்ள மருத்துவத் தன்மை பற்றிப் பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை. வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்த கடற்கரையில் வாழும் மீனவர்கள் நண்டை மருந்தாக உண்ணுகிறார்கள். பொதுவாகவே நண்டு உணவானது இருதய நோய்க்கும் ஆஸ்துமாவிற்கும் மருந்தாகவும், நண்டு சூப்பானது மலேரியா, டைபாய்டு நோய்களிலிருந்து குணமடைந்தவர்களுக்குத் தரப்படும் சத்து மருந்துகளிலும் பயன்படுத்தப்படுகிறது. கடல் உயிரினங்களினால் பற்பல மருத்துவப் பயன்கள் உள்ளன. இதன் காரணமாக அவற்றின் இனத்தொகை குறையுமுமானால் அது மக்களுக்குப் பல பாதிப்புகளை ஏற்படுத்தும். அதை நன்கு உணர்ந்து அவற்றை அழிக்காமல் பாதுகாக்க வேண்டியது மக்களது கடமையாகும்.

(தழுவல் : களஞ்சியம்)

<u>வினாக்கள்</u>

Q18. சிலர் ஏன் கடல் உணவுகளின் சிறப்புகளை அறிவதில்லை?

(4 மதிப்பெண்கள்)

____________________

____________________

____________________

200

21) " இவ்வுணவுப் பொருட்கள் அரிய மருந்துப் பொருட்களாகவும் பயன்படுகின்றன என்பது பெரிய வியப்பை ஏற்படுத்தலாம்" என்ற தொடரில் 'பெரிய வியப்பு' என்பது எதைக் குறிக்கிறது? ( 3 ம)

20) ஒருவருக்கு தோல் வியாதி ஏற்படுவதற்கான மூலக் காரணம் என்ன? அதை தடுப்பதற்கான சிறந்த வழி எது?( 4 ம.)

21)கடல் உணவு எப்படி மாரடைப்பு ஏற்படும் அபாயத்தைத் தடுக்கிறது? ( 4 ம.)

22) இங்கிலாந்து மருத்துவமனை மேற்கொண்ட ஆராய்ச்சி என்ன? (2 ம)

23) அ. டைபாய்டு, வயிற்றுப் போக்கு ஆகியவற்றால் அவதிப்படும் மீனவர்கள் தங்களை குணப்படுத்திக் கொள்ள என்ன செய்வார்கள்? ( 3 ம)
ஆ. கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சனை என்ன? ( 2 ம)

205

**Q24.** பொருள் எழுது (4 மதிப்பெண்கள் )

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. வாய்ப்பு ____________________ (2 மதிப்பெண்கள்)

ஆ தீர்க்கும் ____________________ (2 மதிப்பெண்கள்)

முற்றும்

(அடுத்த பக்கம் பார்க்க)

Prelims

P -6 உயர்தமிழ் தாள் -8

வாழ்க்கை பல பருவங்களைக்...

1) இப்பருவத்தில் 2) அனைத்தையும் 3) இருப்பார்கள் 4) முயற்சிக்கிறார்கள்
5) வளர்க்க
6) கற்றவர்களின் விருப்பமாகும்.
7) தீடீரென்று ஏற்பட்ட வெள்ளமே ஆகும்.
8) மிகச் சிறந்த அறிவுரையை வழங்கினார்.
9) முதல் பரிசைப் பெற்றிருக்க மாட்டாள்.
10) விருந்தினர்களுக்கு
11) அவ்வாயிற்காவலரிடம்
12) வருத்தத்துடன்
13) யோசனையை
14) 8
15) 3
16) 5
17) 4
18)கடல் உணவுப் பொருள்களின் மேல் சிலருக்குள்ள தேவையற்ற அச்சம் காரணமாகவும், அவற்றைப் பற்றிய சரியான தகவல் தெரியாததாலும் உண்ணாத சிலரால் பரப்பி விடப்படும் புரளிகள் காரணமாகவும் மக்கள் இவற்றை வெறுக்கிறார்கள். அதனால் சிலர் கடல் உணவுகளின் சிறப்புகளை அறிவதில்லை.

19)கடல் உணவு உடலுக்குத் தேவையான வைட்டமின்களோடு மிகுந்த சக்தியையும் வழங்குகிறது. இன்றைய மருத்துவ உலகில் தயாரிக்கப்படும் ஐம்பது விழுக்காட்டுக்கும் மேலான அரிய மருந்துப் பொருட்களுக்கான மூலம் கடல் உயிரினங்கள் தான் என்பதை 'பெரிய வியப்பு' என்ற தொடர் குறிக்கிறது.

20) வைட்டமின் 'ஏ' மற்றும் 'டி' குறைபாடுகளே ஒருவருக்குத் தோல் வியாதி ஏற்படுவதற்கான மூலக் காரணமாகின்றன. அதைத் தடுப்பதற்காக மீன் எண்ணெயை உண்ண வேண்டும்.

21) கடல் உணவின் ஒரு வகை, ரத்தத்திலுள்ள கொழுப்புச் சத்தின் அளவைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. இரத்தத்தில் கொழுப்புச் சத்தின் அளவு குறைவதால், இதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் பாதை சீரடைகிறது.இதனால் இரத்தத்தின் செயல் தங்கு தடையின்றிச் சீர்படுத்தப்படுகிறது.இவ்வாறு கடல் உணவு மாரடைப்பு ஏற்படும் அபாயத்தைத் தடுக்கிறது.

22) 'சால்மன்' எனப்படும் மீன் மனிதனுக்கு ஏற்படும் கொடிய சிறுநீரக நோய்களைத் தீர்க்கும் வல்லமை பெற்றிருக்கிறதா என்பதே இங்கிலாந்து மருத்துவமனை மேற்கொண்ட ஆராய்ச்சி ஆகும்.

23) அ.டைப்பாட்டால் அவதிபடும் மீனவர்கள் நண்டைச் சூப்பாக உண்ணுவார்கள். வயிற்றுப் போக்கால் அவதிப்படும் மீனவர்கள் நண்டை மருந்தாக உண்ணுவார்கள். இவ்வாறு அவர்கள் தங்களைக் குணப்படுத்திக் கொள்வார்கள்.
ஆ.கடல் வாழ் உயிரினங்களால் பற்பல மருத்துவப் பயன்கள் உள்ளதால் அவற்றின் இனத்தொகை குறைகிறது.

PRIMARY SCHOOL

PRELIMINARY EXAMINATION

HIGHER TAMIL - 9

PRIMARY SIX

Name : ____ ________________ )    Marks : ______

Class : P 6 ________

Date :

**Instructions**

1. Write your name and class on this page.
2. Do not turn the pages until you are told to do so.
3. Follow all instructions carefully.

P6 HMT

*Prelims* தாள் - 9

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **<u>ஒன்றைத்</u>** தேர்ந்தெடுத்து **<u>150 சொற்களுக்குக் குறையாமல்</u>** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

<u>வினா 1</u>

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**எல்லாமே தவறாகிப் போன ஒரு நாள்**

அன்று நடந்தது எல்லாமே உனக்கு சாதகமாக இல்லை. என்ன நடந்தது, ஏன் நடந்தது, இவற்றால் நீ எவ்வாறு பாதிப்படைந்தாய் என்று எழுது.

<u>வினா 2</u>

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

அது காலை உச்ச நேரம். பெருவிரைவு போக்குவரத்து நிலையம் கூட்ட நெரிசலாகக் காணப்பட்டது. ரயில் வண்டி வந்தது. எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு ரயில் பெட்டியில் ஏறினர். கதவு மூடியது. என் அருகிலிருந்த சிறுமி அழத் தொடங்கினாள்................

20

Prelim

பெயர்: ______________ (6__)
தேதி: ______________

தாள்-1

**அ பிரிவு**

A 1. **பிழைத்திருத்தம் ( 10 ம பெ)**
பின்வரும் பகுதியில் Q1 முதல் Q5 கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது

சிங்கப்பூரிலிருந்து பகல் நேரத்தில் லண்டன் செல்ல விரும்புவோருக்கு இப்போது வாய்ப்பிருக்கிறது. அந்த இரு (1)நாட்டுக்கும் இப்போது நேரடி பகல் நேர விமானச் சேவை தொடங்கப்பட்டிருக்கிறது. சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் அந்த விமானச் (2)செவையை வழங்குகிறது. இந்தப் பகல் நேர விமானச் சேவை வாரத்திற்கு இரண்டு முறை வழங்கப்படும். சிங்கப்பூரிலிருந்து விமானங்கள் திங்கட்கிழமைகளிலும் 3)சனிக்கிழமைகள் லண்டனுக்குச் செல்லும். இங்கிருந்து லண்டன் (4)சென்ற விமானம் அந்த இரு நாட்களிலும் பிற்பகல் ஒரு மணிக்குத்தான் இங்கிருந்து புறப்படும். அதே நாள் இரவு ஏழு நாற்பதுக்கு லண்டன் விமான (5) நிளையத்தைச் சேரும். இவ்விமானச்சேவை பலரது கனவை நனவாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

| | |
|---|---|
| (1) | |
| (2) | |
| (3) | |
| (4) | |
| (5) | |



P6 | HMT | Prelims | 9

**A 2. வாக்கியங்களை முடித்தெழுதுதல்; ( 8 மதிப்பெண்கள்)**

பின்வரும் Q6 முதல் Q9 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

6 ராம் தீய நண்பர்களுடன் சினேகம் கொண்டு தீய பழக்கங்களுக்கு அடிமையானான்.

ராம் தீய பழக்கங்களுக்கு அடிமையாகாமல் இருக்க ____________________

______________________________________

7. திரு கோ கெங் சுவீ சிங்கை நாட்டுக்கு பல புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தினார்.

சிங்கை நாட்டுக்கு பல ______________________________

______________________________________

8. நேர்மையுடன் நடந்துகொண்டால் வாழ்க்கையில் வெற்றி அடையலாம்.

நேர்மையாக நடந்துகொள்ளாவிட்டால் __________________________

______________________________________

9. மாணவர்கள் அயராது உழைத்ததால் தங்கள் தேர்வில் சிறப்பு தேர்ச்சி அடைந்தனர்.

மாணவர்கள் தங்கள் தேர்வில் சிறப்பு தேர்ச்சியடைந்ததற்கு

______________________________________

______________________________________



21

**A3. வேற்றுமை உருபுகள் ( 8 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் Q10 முதல் Q13 வரையுள்ள வினாக்களுக்கு அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

ஒரு நாள் ஔவையார் சோழ நாட்டிற்கு வந்தார். அங்குப் புலவர்கள் சோகத்தோடு இருப்பதை அவர் கவனித்தார். அதற்கான காரணத்தைக் கேட்டபோது

( 10) ________ (புலவர்) ஒருவர், "சோழ மன்னர் (11) ________ ( எங்கள்)

நாளை காலைக்குள் நான்கு கோடி (12) ________ ( பாடல்கள்) பாடி முடிக்கும்படி கட்டளை இட்டிருக்கிறார். ஆனால், எல்லாரும் சேர்ந்து இரவெல்லாம் கண்விழித்துப் பாடினாலும், அவ்வளவு பாடல்களைப் பாடி முடிக்க முடியுமா!" என்று

(13) ________ (கவலை) கேட்டனர். ஔவையார் தன் மனக்கண்ணால் மன்னனின் எண்ணத்தைப் புரிந்து கொண்டார். நான் உங்களுக்காக பாடுகிறேன் என கூறினார்.

ஆ பிரிவு

**B4 முன்னுணர்வுக் கருத்தறிதல்; ( 8 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணை கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுதுக.

ஓர் ஊரில் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு ஆண்மக்கள் இருந்தனர். (14)__________. இரண்டு மகன்களையும் ஓர் இருட்டறைக்கு அழைத்துச் சென்று, "(15) __________ . அப்பணத்தைக் கொண்டு ஏதேனும் பொருள் வாங்கி வந்து இந்த அறையை நிரப்ப வேண்டும்," என்றார்.

(16) ______________________________ பணத்தைச் செலவழிக்கும் முறையை இருவரும் பட்டியல் இட்டனர்.

இளைய மகன் பணத்தில் ஒரு பகுதியைச் செலவு செய்து விளக்கு ஒன்று வாங்கி வந்தான். (17) __________. அந்த அறை முழுவதும் ஒளி நிரம்பியது. அதைக் கண்ட தந்தை மிகவும் மகிழ்ந்து போனார். அவர் தம் இளைய மகனின் அறிவை மெச்சினார்.

| கேள்வி எண் | விடை |
|---|---|
| 14 | |
| 15 | |
| 16 | |
| 17 | |



212

1. அவர்களில் யார் நல்ல மனம் உள்ளவன் என்று அறிய எண்ணினார்.

2. பிள்ளைகளே, நான் உங்களுக்குக் கொஞ்சம் காலம் தருகிறேன், அக்காலத்தில் கொஞ்சம் பணம் திரட்டுங்கள்.

3. பெரிய மகன் தன் பணத்தைக் கொண்டு பல விளக்குகள் வாங்கி அறையை வெகிச்சமாக்கைனான்.

4. விளக்கை இருட்டறையில் ஒரு பக்கம் போட்டான்.

5. பிள்ளைகளே, நான் கொஞ்சம் பணம் தருகிறேன்.

6. மூத்த மகன் தன் பணத்தை எல்லாம் செலவழித்து கொஞ்சம் காய்ந்த புல்லை வாங்கி வந்து அறை முழுவதும் நிரப்பினான்.

7. அதனை அந்த இருட்டறையில் ஏற்றி வைத்தான்.

8.மகன்கள் இருவரும் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தனர்.

2/10

## இ பிரிவு

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (22 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

ஔவையார் தமிழ் நாட்டில் சிறப்புற்று விளங்கிய ஒரு பெண்பாற் புலவர். இவர் கிழவியராய் உருவம் ஏற்று இருந்தபடியால் இவரை எல்லோரும் ஔவையார் என்று அழைத்தனர் எனக் கூறுவது உண்டு. இவர் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் முதலியோர் வாழ்ந்த காலத்தில் இருந்தவர்.

ஔவையார் கல்வி கேள்விகளில் சிறந்தவர். இவரது கல்வித் திறமை எப்படிப்பட்ட புலவரையும் வணங்கச் செய்யும் தன்மையுடையது. இவர் கருதிய போதே விரும்பிய பொருளை அமைத்துக் கவிபாடும் பெரும் பேறு பெற்றவர். நீதி கூறுவதில் இவரை **வெல்வார்** இல்லை. இவரது வாக்கு எளியது. இனியது. ஆழ்ந்த கருத்துடையது. எச்சமயத்தாரும் பாராட்டும் பொதுமை வாய்ந்தது. பிறநாட்டாரும் இவரது நூல்களின் பொருளைத் தமது மொழியில் பெயர்த்தெழுதி அந்நூல்களின் பெருமையைப் பாராட்டுகின்றனர்.

இவர் இயற்றிய நூல்கள்; ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, விநாயகர் அகவல், பந்தன் அந்தாதி ஔவைக்குறள் முதலியன ஆகும். இவரது மதம் சைவம். இவர் விநாயகக் கடவுளிடத்து மிக்க அன்பு பூண்டு, அப்பெருமானது அருளும் பெற்றவர்.

ஔவையார் பொருளாசை, இன்ப வாழ்க்கை, சண்டை சச்சரவு, பொறாமை, ஆடம்பரம் முதலியவற்றை முற்றும் வெறுத்தவர். கருணை உள்ளம் மிக்கவர். அனைவரிடத்தில் அன்பும் கொண்டவர். மனிதர்களில் **வேறுபாடு** பார்க்காதவர். மக்களுக்குச் சேவை செய்வதும் இறை வழிபாடு என்று நம்பியவர். ஔவை எனும் பெயர் கொண்டு கடைச் சங்க காலத்திலிருந்த பெண்பாற் புலவர் வேறு, இவர் வேறு. ஆனால் இருவருக்கும் பெயரும் புலமையும் ஒற்றுமைப்பட்டிருப்பது மிகவும் அருமையேயாகும்.

18.ஔவையார் எந்த நாட்டுப் புலவர், அங்கு அவர் எப்படி விளங்கினார்? (3)

19) இவர் வாழ்ந்த காலக் கட்டத்தில் எவரவர் இருந்தனர்? (3)

20) ஔவையார் எத்தகைய திறமைகள் பெற்றவராக போற்றப்பட்டார்? (5)

21) ஔவையார் மொத்தம் எத்தனை நூல்கள் எழுதினார்? அவை என்னென்ன? (4)

22) ஔவையாரின் கொள்கைகள் யாவை? (4)

23) கடைச் சங்ககாலத்து ஔவை எப்படிப்பட்டவர்? (3)

**Q24 பொருள் எழுது**

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது. ( 4 மதிப்பெண்கள்)

அ) வெல்வார் ________________

ஆ) வேறுபாடு ________________

Prelims

P -6 உயர்தமிழ் தாள் -9

சிங்கப்பூரிலிருந்து பகல் ...

1) நாடுகளுக்கும் 2) சேவையை 3) சனிக்கிழமைகளிலும் 4) செல்லும்
5)நிலையத்தைச்

6)தீய நண்பர்களுடன் சினேகம் கொள்ளக்கூடாது.
7) புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தியவர் திரு. கோ கெங் சுவீ ஆவார்.
8) வாழ்க்கையில் வெற்றி அடைய முடியாது.
9) அவர்கள் அயராது உழைத்ததே காரணமாகும்.

10) புலவர்களிடம் 11) எங்களிடம் 12) பாடல்களை
13) கவலையுடன்

14) 1 15) 5 16) 8 17) 7

18) ஔவையார் தமிழ்நாட்டுப் புலவர். அவர் அங்கு சிறப்புற்று விளங்கினார்.

19) இவர் வாழ்ந்த காலத்தில் கம்பர், ஒட்டக்கூத்தர் , புகழேந்தி புலவர் முதலியவர்கள் இருந்தனர்.

20) ஔவையார் கல்வி கேள்விகளில் சிறந்தவர். எப்படிப்பட்ட புலவரையும் வணங்கச் செய்யும் இயல்புடைய கல்வித் திறமை இவரிடம் அமைந்திருந்தது.கருதிய போதே விரும்பிய பொருளை அமைத்துக் கவிபாடும் பெரும் பேறு பெற்றவர். நீதி கூறுவதில் சிறந்த இவர் எளிய நடையில் ஆழ்ந்த கருத்துக்களையுடைய நூல்களை எழுதும் திறமை வாய்ந்தவர். ஔவையார் இத்தகைய திறமைகளை பெற்றவராகப் போற்றப்பட்டார்.

21) ஔவையார் ஆத்திச்சூடி , கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி, விநாயகர் அகவல், பந்தன் அந்தாடி ,ஔவைக்குறள் என ஆறு நூல்களை எழுதியுள்ளார்.

22)ஔவையார் பொருளாசை, இன்ப வாழ்க்கை, சண்டை சச்சரவு, பொறாமை ஆடம்பரம் முதலியவற்றை வெறுத்தார். மேலும் அவர் கருணை உள்ளம் மிக்கவர். அனைவரிடத்தில் அன்பும் கொண்டவர். மனிதர்களில் வேறுபாடு பார்க்காதவர். மக்களுக்குச் சேவை செய்வதும் இறை வழிபாடு என்று நம்பியவர். இவையே ஔவையாரின் கொள்கைகள் ஆகும்.

23) கடைச் சங்ககாலத்து ஔவை பெண்பாற் புலவர். இவர் கவிபாடும் புலமை பெற்றவர்.

பொருள் :-

24) அ. வெற்றி பெறுவார். ஆ. வேற்றுமை

தொடக்கப்பள்ளி

உயர்தமிழ் - தாள் 2
PRIMARY SCHOOL

**HIGHER TAMIL- PAPER 2**
**PRIMARY 6**
தாள் - 10

---

Name: ____________________ (     )            Date: ____________________

பெயர்: ____________________

Class: Primary 6 _____

**Total Time : 1 h 20 minutes**

Instructions to candidates

Do not turn over this page until you are told to do so.
Follow all the instructions carefully.
Answer all the questions.

| | |
|---|---|
| Total Marks | /60 |

Parent's signature: ____________________

21

P6 HMT

Prelims தாள் - 10

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**உடற்பயிற்சியின் முக்கியத்துவம்**

உடல் ஆரோக்கியத்தையும் உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தையும் உனக்கு உணர்த்திய ஒரு சம்பவத்தைப் பற்றி எழுது.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

நான் மட்டும் என் பெற்றோர்கள் சொன்னதைக் கேட்டிருந்தால் இவ்வாறு நடந்திருக்குமா? என்று என் தோழி மீனா கண்ணீர் வடித்தாள். அவள் கையில் தொடக்கநிலை இறுதி ஆண்டு தேர்வுகளின் முடிவுகள்................

P 6

தாள் – 1D

**'அ' பிரிவு**

**<u>A1 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)</u>**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்காணும் கட்டத்தில் எழுது.**

காட்டிற்கு வந்த வேடன் ஒருவன் அங்கிருந்த மரத்தில் ஏறினான். பொந்திற்குள் இருந்த இரண்டு கிளிகளைப் **(Q1)** <u>பிடிக்கிறான்</u>. அவற்றுள் ஒரு குஞ்சு அவன் பிடியில் இருந்து தப்பித்தது. கீழே விழுந்த அது தத்தித் தத்திச் சென்றது. அந்த வழியாக வந்த துறவி ஒருவர் அதைப் **(Q2)** <u>பார்த்த</u> , தன் குடிலுக்கு எடுத்துச் சென்றார். இன்னொரு **(Q3)**<u>கிளிக்குஞ்சுக்கு</u> மரத்தில் இருந்து இறங்கினான் வேடன். தன் இருப்பிடம் சேர்ந்த அவன் அதை ஒரு **(Q4)** <u>கூன்டில்</u> அடைத்து வைத்தான். ஒரு கிளிக்குஞ்சு முனிவர் குடிலிலும் மற்றொன்று வேடர்கள் இருப்பிடத்திலும் **(Q5)** <u>வளர்ந்தான்.</u> பல மாதங்கள் கழிந்தன. தப்பித்த கிளிகள் சந்தித்துக்கொண்டன.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |



P6| HMT| Prelims)10

221

A 2 வாக்கியங்களை முடித்தெழுதுதல். ( 8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q 6. ஆசிரியர் கொடுத்த ஊக்கத்தினால் மாறன் எல்லா பாடங்களிலும் வெற்றி பெற்றான்.

மாறனின் வெற்றிக்கு அவன் ______

Q 7. சாலையைக் கடக்கும் பாதசாரிகள் சாலை விதிமுறைகளைப் பின்பற்றுவது கட்டாயமாகும்.

சாலையைக் கடக்கும் பாதசாரிகள் கட்டாயம் சாலை விதிமுறைகளை ______

______

Q 8. சுமாத்திராவில் நடந்த நிலநடுக்கத்தினால் சிங்கப்பூரில் அதிர்வு ஏற்பட்டது.

சிங்கப்பூரில் ஏற்பட்ட அதிர்வுக்குக் காரணம் ______

Q 9. தன்னம்பிக்கையாலும் தைரியத்தினாலும் ஒருவன் படி படியாக உயர்ந்து மேன்மை பெறுகிறான்.

தன்னம்பிக்கையும் தைரியமும் இல்லாத ஒருவன்

______

A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

இந்தோனீசியாவில் உள்ள ஒரு தீவில் ராமா என்ற ஒரு பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் தனது முதிர்ந்த வயதிலும் தன்னால் முடிந்த Q10.________ (உதவிகள்) பிறருக்குச் செய்து வந்தார். அவருடைய நற்பண்பு மக்களை அதிகம் கவர்ந்தது.

நல்ல மனம் படைத்த ராமாவுக்கு ஒரு விசித்திரமான சக்தியும் இருந்தது. கடந்த காலத்தில் நடந்தவற்றையும் எதிர்காலத்தில் நடக்கப்போவதையும் அறியும் சக்தி இருந்தது. அவர் Q11. ________ (கனவுகள்) மூலம் அவற்றை அறிந்து கொண்டார். ஒருநாள் இரவு அவர் கனவு கண்டார். அக்கனவில் கனத்த Q12. ________ (மாரி) பெருவெள்ளம் அத்தீவுக்கு வரப்போவதாக அறிந்தார்.

எனவே அவர் அத்தீவிலுள்ள மக்களைக் காப்பாற்ற எண்ணினார். உடனே அவர் ஒவ்வொரு வீடாகச் சென்று வரப்போகும் விபத்தைப் பற்றிக் கூறினார். Q13.________ (பக்கம்) உள்ள மலைக்குச் சென்றால் பாதுகாப்பாக இருக்கலாமென சொன்னார். அவர் வார்த்தையை நம்பி மக்களும் அவ்வாறே செய்தனர். அவர்களும் பல நாட்கள் மலையில் நலமாகக் கழித்தனர்.

"ஆ" பிரிவு

**B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

ஒரு சமயம் பத்திரிக்கை நிருபர் ஒருவர் பிரிட்டிஷ் பிரதமராயிருந்த வின்ஸ்டன் சர்ச்சிலைக் காண்பதற்காகச் சென்றிருந்தார். (Q14)____________________. அதனால், சர்ச்சிலைக் காண்பதற்கு அந்த நிருபர் நீண்ட நேரம் காத்திருக்க நேர்ந்தது. தம்முடைய அலுவல்களை முடித்துக்கொண்ட சர்ச்சில் அப்பத்திரிக்கையாளரை உள்ளே வர அனுமதித்தார்.

(Q15) ____________________. அப்போது சர்ச்சில் புன்னகை வெளிப்படப் பேசத் தொடங்கினார். (16) "____________________. இதற்கு முன் ஒன்பது பத்திரிக்கையாளர்கள் ஒருவர் பின் ஒருவராக அரை மணி நேரத்துக்கு ஒருமுறை என்னைக் காண வந்தார்கள். நான் அவர்களைச் சந்திக்க இயலாது என்று கூறி அனுப்பிவிட்டேன். உங்களை மட்டும் சந்திக்கிறேன். நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி," என்றார்.

ஒரு வினாடி மௌனத்திற்குப் பின்னர், அந்நிருபர் புன்னகைத்தவாறே, " இதற்கு முன்னரே ஒன்பது பத்திரிக்கை நிருபர்கள் வந்து சென்றது எனக்குத் தெரியும். (Q17)____________________. இதற்கு முன்னர் ஒன்பது முறை உங்களைப் பேட்டி காண முயன்ற அந்த ஒன்பது பேரும் நான்தான்," என்ற பதிலைக் கேட்டதும் சர்ச்சில் மலைத்துப் போனார்.

(1) நீங்கள் அடுத்த முறை என்னைத் தேடி வராதீர்கள்.
(2) அறைக்குள் நுழைந்த நிருபர் வணக்கம் தெரிவித்துவிட்டு இருக்கையில் அமர்ந்தார்.
(3) நான் இவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும் என்பதும் எனக்குத் தெரியும்.
(4) சர்ச்சில் பேட்டி கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை.
(5) அறைக்குள் நுழைந்த நிருபர் கோபத்துடன் தாமதத்திற்கான காரணத்தைக் கேட்டார்.
(6) நீங்கள் உண்மையில் அதிர்ஷ்டக்காரர்தான்.
(7) நான் பத்தாவது என்பதும் எனக்குத் தெரியும்.
(8) சர்ச்சில் அச்சமயத்தில் ஒரு முக்கிய அலுவலில் ஈடுபட்டிருந்தார்.



721

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |



22

**<u>C5 சுயவிடைக் கருத்தறிதல்</u> (22 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.

'தோன்றின் புகழோடு தோன்றுக' என்று கூறுவதன் வழி <u>புவியில்</u> பிறக்கின்ற அனைவரும் புகழோடு வாழ வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார் நம் வள்ளுவர் பெருமான். உண்மையில் எல்லோருக்கும் அந்த ஆசை உண்டு. ஏதாவது ஒரு வகையில் யாராது ஒருவர் நம்மைப் பாராட்ட வேண்டும் என்று நம் ஒவ்வொருவரின் உள்ளமும் ஆசைப்படுகிறது.

புகழ் பெற்றவர்கள் என்றவுடன் நம்மில் சிலர் ஊராலும் உலகத்தாலும் பாராட்டப்பட்ட சிலரைத்தான் புகழ்பெற்றவர்கள் என்று நினைக்கிறோம். ஆனால் அது தவறு. ஒருவரை மற்றவர் பாராட்டினால் கூட அதுவும் அவருக்குப் புகழையே சேர்க்கிறது.

குடும்பத்தில் பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் உறுதுணையாக நடந்துகொண்டு, அதே சமயத்தில் தன் கடமைகளைச் செம்மையாகச் செய்பவன் குடும்பத்தாரால் பாராட்டப்படுகிறான். பள்ளிக்கு வரும் அவன் சக மாணவர்களோடு அன்பாகப் பழகுகிறான். இனிமையாகப் பேசுகிறான். ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்கிறான். பள்ளி விதிமுறைகளைத் தவறாமல் பின்பற்றுகிறான். எனவே பள்ளியில் உள்ளவர்களின் பாராட்டுதலைப் பெறுகிறான். வேலை செய்யும் இடத்தில் கடமையை உணர்ந்து பொறுப்புடன் வேலை செய்கிறான். அங்கே அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுகிறான். வெளியே செல்லும் அவன் பெரியவர்களிடம் சிறியவர்களிடமும் பணிவன்புடன் நடக்கிறான். துன்பப்படுவோருக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்கிறான். அங்கே பலரும் அவனைப் பாராட்டுகின்றனர்.

அவன் தனக்கென ஒரு <u>குறிக்கோளை</u> வைத்துக்கொள்கிறான். அதனை அடைய அல்லும் பகலும் பாடுபடுகிறான். வெற்றியும் காண்கிறான். அப்போது ஊரும் உலகமும் அவனைப் பாராட்டுகிறது. இவ்வாறு எல்லா நிலைகளிலும் ஒருவன் செய்கின்ற நற்செயல்கள் அவனுக்குப் பாராட்டைப் பெற்றுத் தருகின்றன. அதனால் நல்ல செயல்களைச் செய்ய முன்வந்தால் நாமும் புகழ் பெறலாம்.



726

சிலர் பாராட்டுகளைப் பெற முயற்சி செய்வதில்லை. அவ்வாறு முயற்சி செய்யாத அவர்கள் பாராட்டுகளைப் பெற்றவரைப் பார்க்கும்போது 'அவனுக்கென்ன, பணபலம் இருக்கிறது. உறவினர்களின் உதவி வேறு கிடைக்கிறது' என்று கூறி, தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்று தங்களின் ஏக்கத்தைத் தணித்துக் கொள்கிறார்கள். ஆயினும் பணபலமோ, ஆட்பலமோ ஒருவருக்குக் கட்டாயம் புகழைத் தருவதில்லை. அவருக்குள் இருக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணமும் அதற்காகப் பல துன்பங்கள் ஏற்படினும் நிறுத்தாது மேற்கொண்ட நடவடிக்கைகளுமே அவனைப் புகழின் சிகரத்துக்கு அழைத்துச் செல்கின்றன.

<u>வினாக்கள்</u>

18. ஒவ்வொருவரின் மனமும் எதற்கு ஆசைப்படுகிறது? (3)

________________________________________

________________________________________

________________________________________

19) புகழைப் பற்றி சிலர் எத்தகைய மாறுபட்ட கருத்தினைப் பெற்றிருக்கின்றனர்? (3)

________________________________________

________________________________________

________________________________________

20) பள்ளியில் ஒருவன் பாராட்டைப் பெற வேண்டுமெனில் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும்? ( 4)

________________________________________

________________________________________

________________________________________



22

21. வெளியே செல்லும் ஒரு நல்லவன் ஏன் பலராலும் புகழப்படுகிறான்? (4)

22. புகழ் பெறாதவர்கள் தங்களைத் தாங்களே எவ்வாறு சமாதானம் செய்து கொள்கிறார்கள்? (4)

23. புகழின் உச்சியை அடைய ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்புகள் யாவை? (4)

சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

24. புவியில் : ____________

25. குறிக்கோளை : ____________

Prelims

P-6 உயர்தமிழ் தாள் -10

காட்டிற்கு வந்த வேடன்...
1) பிடித்தான் 2) பார்த்து 3) கிளிக்குஞ்சுடன் 4) கூண்டில்
5) வளர்ந்தன

6) ஆசிரியர் கொடுத்த ஊக்கமே காரணமாகும்.
7) பின்பற்ற வேண்டும்.
8) சுமாத்திராவில் நடந்த நிலநடுக்கமே ஆகும்.
9) படிப்படியாக உயர்ந்து மேன்மை பெற முடியாது.

10) உதவிகளை 11) கனவுகளின் 12) மாரியால் 13) பக்கத்தில்

14) 8 15) 2 16) 6 17) 7

18) ஒவ்வொருவரின் மனமும் ஏதாவது ஒரு வகையில் யாராவது ஒருவர் தம்மைப் புகழ வேண்டும் என்பதற்கு ஆசைப்படுகிறது.

19) சிலர் ஊராலும் உலகத்தாலும் பாராட்டப்பட்டவர்களைத் தான் புகழ் பெற்றவர்கள் என்று எண்ணுகிறார்கள். அவர்கள் புகழைப்பற்றி இத்தகைய மாறுபட்டக் கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள்.

20) பள்ளியில் ஒருவன் பாராட்டைப் பெற விரும்பினால் சக மாணவர்களோடு அன்பாகப் பழகுவதோடு இனிமையாகப் பேசவும் வேண்டும். ஆசிரியர் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். பள்ளி விதிமுறைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். பள்ளியில் ஒருவன் பாராட்டைப் பெற வேண்டுமெனில் இவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும்.

21) வெளியே செல்லும் ஒரு நல்லவன் பெரியவர்களிடமும் சிறியவர்களிடமும் பணிவன்புடன் நடந்து கொள்வதாலும் துன்பப்படுபவர்களுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வதாலும் பலராலும் புகழப்படுகிறான்.

22) புகழ் பெறாதவர்கள் புகழ் பெற்றவர்களைக் கண்டு அவர்களுக்குப் பணபலமும் சொந்தக்காரர்களின் உதவியும் கிடைக்கிறது என்று கூறி தங்களைத் தாங்களே சமாதானம் செய்து கொள்கிறார்கள்.

23) புகழின் உச்சியை அடைய ஒருவர் தனக்குள் நல்லது செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தை வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அவர் அதற்காகப் பல துன்பங்கள் ஏற்பட்டாலும் மேற்கொண்ட நடவடிக்கைகளை விடாது தொடர வேண்டும். இவையே அவரிடம் இருக்க வேண்டிய பண்புகள் ஆகும்.

24) அ. பூமியில் ஆ. இலட்சியத்தை